செ.வெ.எண்: 28 நாள்: 25.10.2021

**தென்காசி மாவட்டம்**

**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இன்று (25.10.2021) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளிக்க வந்த மாற்றுத்திறனாளியிடம் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ஜனனி சௌந்தர்யா அவர்கள் நேரில் சென்று மனுக்களை பெற்றுக்கொண்டு கோரிக்கையினை கனிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதி, பட்டா மாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தனி நபர் கடன், விதவை உதவித்தொகை தொடர்பாக மற்றும் இதர மனுக்கள் என 418 மனுக்கள் பெறப்பட்டது.

இந்த கூட்டத்தில், பெறப்பட்ட மனுக்களை தகுதி வாய்ந்த மனுக்களா என்பதை விசாரணை மேற்கொண்டு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு பதிலளிக்குமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.பா.ஷீலா, உட்பட பல்வேறு துறைசார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**